**Crl. Misc.39**

**Pg.No.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC No. 37/2024**

**Deposition of Witness :PW4**

| | | | |
|---|---|---|---|
| Name | செந்தாமரை | Taluk | |
| Husband Name | சுப்ரமணி | Village | |
| Age | | Calling | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 13.08.2025.**

**குறுக்கு விசாரணை**

1) நான் பிறந்து வளர்ந்த ஊர் வேலாயுதம்பாளையம் என்றால் சரிதான். என் கணவர் பிறந்த ஊர் பரமத்தி சங்கமநாயக்கன்பட்டி என்றால் சரிதான். நான் புகளூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக 5 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். மோகனாம்பாளை எப்படி தெரியும் என்றால் என்னுடன் பணிபுரிந்த வகையில் தெரியும். அவருடைய வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 30 வீடுகள் இடைவெளியில் இருக்கும். மோகனாம்பாள் தற்போது எங்கு வேலை செய்கிறார் என்றால் தற்போது பஞ்சாமதேவியில் சுமார் 7 மாதங்களாக வேலை செய்து வருகிறார். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

2) என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பாஸ்கரன் மோகனாம்பாளுக்கு பணம் தரவில்லை என்றும், பராமரிக்கவில்லை என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய வேலை நேரம் காலை 5.30 மணிமுதல் 10.00 மணி ஆகும். மதியம் 1 மணி முதல் மாலை 5 மணி வரை ஆகும். பாஸ்கரனின் சம்பளம் ரூ. 20 ஆயிரம் என்று மோகனாம்பாள் என்னிடம் ஆவணம் எதுவும் காண்பித்தாரா என்றால் இல்லை. என்னுடைய கணவர் ஊரான பரமத்தியில் வசித்து வருகிறேன் என்றும், நான் வேலாயுதம்பாளையத்தில் வசித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால்

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்

சரியல்ல. நானும், மோகனாம்பாளும் வெவ்வேறு நகராட்சியில் பணிபுரிகிறோம் என்றும், அதனால் நாங்கள் இருவரும் சந்திக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

Sd/-செந்தாமரை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்